**தலைப்பு 281 - கமநல அபிவிருத்தித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 281 - கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 25 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த ஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 8,162.09 மில்லியனாக இருந்ததுடன், இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 7,831.99 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 330.10 மில்லியன் அதாவது 4.04 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
| --- | --- | --- | --- | --- |
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 6,076.09 | 5,988.42 | 87.67 | 1.44 |
| மூலதனம் | 2,086.00 | 1,843.57 | 242.43 | 11.62 |
| மொத்தம் | **8,162.09** | **7,831.99** | **330.10** | **4.04** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக திணைக்களத்திற்கு ஏனைய அமைச்சொன்றினாலும் 04 திணைக்களங்களாலும் ரூபா 305.95 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் 285.71 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 20.24 மில்லியன் அல்லது 6.62 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 28101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
| --- | --- | --- | --- | --- | --- |
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 261.76 | 214.54 | 191.76 | 227.94 | 500.00 | 375.17 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழ் 08 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் ரூபா 306.94 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0015/0136/000 | 2.65 |
| 6000/0000/00/0006/0051/000 | 121.66 |
| 6000/0000/00/0002/0010/000 | 5.74 |
| 6000/0000/00/0001/0010/000 | 0.01 |
| 6000/0000/00/0013/0024/000 | 1.04 |
| 6000/0000/00/0018/0011/000 | 9.30 |
| 6000/0000/00/0016/0009/000 | 141.15 |
| 6000/0000/00/0013/0032/000 | 25.39 |
| **மொத்தம்** | **306.94** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

திணைக்களத்தினால் 2015 பெப்ரவரி 28 ஆந் திகதி அளவில் கமநல சேவை நிலையங்களின் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் கீழே காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| ஆண்டு | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2006 | 14 |
| 2007 | 14 |
| 2008 | 13 |
| 2009 | 15 |
| 2010 | 22 |
| 2011 | 23 |

| | |
|---|---|
| 2012 | 29 |
| 2013 | 41 |
| 2014 | 48 |
| 2015 | 142 |

### 3.2 ஏடுகளும் பதிவேடுகளும் பேணப்படாமை

திணைக்களத்தால் கீழே காட்டப்பட்டுள்ள வாகனங்கள் பட்டியல்படுத்தும் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்ததுடன், ஏனைய பதிவேடுகள் பேணப்படாதிருந்தமையும் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | வாகனங்கள் பட்டியல்படுத்தும் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1647(உ) | நாளது வரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | கணனி, துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454 (2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |

### 3.3 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 6000/0000/00/0051/0136/000 உடைய பொது வைப்புக் கணக்கின் காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) திணைக்களப் பதிவேடுகளின் பிரகாரம் 6000/0000/00/0006/0051/000 உடைய வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி மற்றும் அத்திகதியில் உள்ளவாறு திறைசேரிப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளுக்கிடையே ரூபா 651,797 வேறுபாடொன்று காணப்பட்டது.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

28101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,491,584 ஆகக் காணப்பட்டதுடன், அந் நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான கால கடந்திருந்த போதிலும் அந்நிலுவை மீதியை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியுடன் இணக்கம் செய்த போது ரூபா 2,623,580 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன், இவ்வேறுபாட்டினுள் 2007 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தனிப்பட்ட மீதிகள் பொழிப்பின் வேறுபாடான ரூபா 246,528 தொகையும் இனங்காணப்படாத வரவு மீதியான ரூபா 2,889,908 தொகையும் இனங்காணப்படாத செலவு மீதியான ரூபா 512,586 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்ததாக மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத ஓய்வுபெற்ற, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் வேலை முடிவுறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து 2015 திசெம்பர் 31 உள்ளவாறான கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,542,960 ஆக இருந்தது. அம்மீதியில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 7,048,802 ஆன கடன் மீதியொன்றாக இருந்தது.

(ஈ) பிரதேச சபைகளுக்கு போட்டியிட்டு தெரிவாகிய மூன்று உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 30,740 ஆன கடன் மீதியொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மாகாண சபை உத்தியோகத்தர்களாக உள்ளீர்க்கப்பட்ட கமநல சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 486,944 ஆன கடன் மீதி 6 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வருவதுடன், அம்மீதியை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதி 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களினதும் இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களினதும் கடன் மீதிகள் 03 மாதங்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தில் 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யப்படாமல் இருந்த இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,415,748 ஆக இருந்தது.

## 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 06 பிரிவுகளில் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 உள்ளகக் கணக்காய்வு**

தலைமை அலுவலகத்திலும் மாவட்ட அலுவலகங்களிலும் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.5.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வறிக்கை 2016 யூன் 30 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

கீழே விபரிக்கப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் நிலவியமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| சொத்து வகை | அலகு எண்ணிக்கை | விளைவற்றதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 09 | 02 ஆண்டுகள் முதல் 5 ஆண்டுகள் வரை |
| இயந்திரங்கள் | 100 | 02 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படுதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் 02 மாவட்ட அலுவலகங்களினதும் தலைமை அலுவலகத்தினதும் அவ்வறிக்கைகளை 2016 யூலை 22 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்கள், புல்டோசர் இயந்திரங்கள் தொடர்பான பொருள் மெய்மையாய்வு அறிக்கையொன்று மீளாய்வாண்டிற்கான சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2004 ஒக்தோபர் 14 ஆந் திகதிய 174 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சொத்துக்களுக்குரிய குறியீட்டு இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iv) திணைக்களத்திற்குச் சொந்தமான 04 சக்கர உழவு இயந்திரங்கள் 72 உம், 25 டேலர்களும், 02 சக்கர் உழவு இயந்திரங்கள் 36 உம் ஏனைய 247 விவசாய உபகரணங்களையும் கைதவிர்ப்பதற்காக இனங்காணப்பட்டிருந்ததுடன், கைதவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| 2000 இன் 46 ஆம் இலக்க கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் | | |
| ▪ 14(3) ஆம் பிரிவு | 894,831 | குருணாகல் மாவட்டத்தின் 07 கமநல சேவை நிலையங்களில் பிணக்குகள் காணப்படுகின்ற வயல்களின் விவசாயிகளால் காணி உரிமையாளர்களுக்கு கொடுப்பனவு செய்யும் பொருட்டு வைப்புச் செய்யப்பட்டுள்ள காணி உரிமை கட்டணத் தொகையை மாவட்ட நீதிமன்றத்தில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ▪ 32 மற்றும் 33 ஆம் பிரிவுகள் | | 390 அத்துமீறிய வயல் நிரப்பல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன், வழக்கு தொடரல் இணக்கப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்த முறைப்பாடுகள் 105 ஆக இருந்தன. |
| ▪ 53(1) ஆம் பிரிவு | - | விவசாயக் காணிகள் தொடர்பாக பதிவேடொன்றைத் தயாரித்து திருத்தங்களும் மீளமைப்புக்களும் செய்து பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 2,267,532 | 14 மாவட்ட அலுவலகங்களின் வங்கிக் கணக்குகளிலும் தலைமை அலுவலக வங்கிக் |

| | | | |
|---|---|---|---|
| | | | கணக்கிலும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்டு ஆனால் கொடுப்பனவிற்கு வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காலாவதியான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 751(1) | 1,876,370 | நுவரெலியா மாவட்டத்தின் இரண்டு கமநல சேவை நிலையங்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,876,370 பெறுமதியான பொருட்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 756(3) | 2,262,169 | குருணாகல் மாவட்டத்தின் 11 கமநல சேவை நிலையங்களிலும் பதுளை மாவட்டத்தின் 26 கமநல சேவை நிலையங்களிலும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத / காலாவதியான பசளை, விவசாய இரசாயனங்கள், விதைகள் மற்றும் விவசாய உபகரணங்கள் போன்ற இருப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 880 | | பூண்டுலுஓயா, மந்தாரம்நுவர, ஹங்குரன்கெத மற்றும் ஹரங்கல கமநல சேவை நிலையங்களின் பிரதேச உத்தியோகத்தர்கள், குழு எழுதுனர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களால் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |

(இ) 2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய 04/2012 ஆம் இலக்க (விவசாய வங்கி) கமத்தொழில் அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை

---

| | | | |
|---|---|---|---|
| (i) | 3.4.2 ஆம் பந்தி | | விவசாயம் சார்ந்த கடன் தீர்ப்பனவின் கூடிய காலஎல்லை 06 மாதங்களாக இருந்த போதிலும், 1998 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த கடன்களில் ரூபா 215,290,628 தொகை நிலுவையாக காணப்பட்டன. அதில் ரூபா 66,188,529 தொகை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்து வந்தன. |
| (ii) | 4.2 ஆம் பந்தி | | கமத்தொழில் வங்கிகளின் கையிலுள்ள காசு எல்லை ஆகக் கூடிய கொடுக்கல் வாங்கல் தேவைப்பாடு மற்றும் வணிக வங்கிகளுக்கான |

| | |
|---|---|
| | தூரத்தின் அளவு என்பவற்றின் பிரகாரம் ரூபா 25,000 வரை வைத்துக்கொள்ள முடியுமான போதிலும், அந்த எல்லையை விஞ்சி 60 கமத்தொழில் வங்கிகளில் பணம் கையில் வைத்திருக்கப்பட்டிருந்தன. |
| (iii) 4.4.2 ஆம் பந்தி | கமத்தொழில் வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த மூலதனத் தொகைகள் 5 ஆண்டுகளிற்குள் மீளளிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 125 கமத்தொழில் வங்கிகளால் மீளச் செலுத்தப்படாதிருந்த நிலுவை மூலதனத் தொகை ரூபா 48,770,856 ஆக இருந்தன. |

## 3.8 உள்நாட்டு நிதிகளின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல், செயற்திட்ட தாமதங்கள் தொடர்பான கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்

பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | கைவிடப்பட்டமைக்கான காரணங்கள் |
|---|---|---|---|
| | ரூபா | | |
| நாகொடை கமநல சேவை நிலைய நிர்மாணம் | 204,000 | 2015 | காணியில் சட்ட ரீதியான சிக்கல் காணப்படுகின்றமை |
| அவுலேகம கமநல சேவை நிலைய நிர்மாணம் | 2,730,000 | 2015 | பெறுகைகள் நடவடிக்கைகள் மேற்கொள்வதில் தாமதம் |

### (ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

ரூபா 13,542,180 மதிப்பிடப்பட்ட கிரயத்திலான இரத்தினபுரி மாவட்ட அலுவலக நிர்மாணம் மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 2,375,820 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், பெறுகைகள் நடவடிக்கைகள் மேற்கொள்வதில் தாமதம் காரணமாக மீளாய்வாண்டிலும் அதனை பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது.

**(இ) பொருட்கள் சேவைகள் வழங்கப்படாமலே பணம் விடுவிக்கப்படல்**

கொழும்பு மாவட்ட அலுவலகத்திற்கு அணைக்கட்டு பலகைகள் கொள்வனவு செய்வதற்காக 2015 திசெம்பர் 30 ஆந் திகதி ரூபா 1,867,330 பெறுமதியான காசோலையொன்று 2016 மார்ச் 03 ஆந் திகதி அரச கூட்டுத்தாபனமொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், குறித்த அரச கூட்டுத்தாபனத்தினால் 2016 யூன் 05 ஆந் திகதி வரையிலும் அந்த அணைக்கட்டுப் பலகைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 செயலாற்றல்**

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் பிரகாரம் திணைக்களத்தின் கீழே காட்டப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகள் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டன.

(i) 12 மாவட்டங்களில் செய்கை பண்ணப்படாத வயல்களை பயன்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 135 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. பயிர்ச்செய்கைக்காக பொருத்தமான 36476 ஏக்கர் காணி இணங்காணப்பட்டிருந்ததுடன், அதில் 39 மில்லியன் செலவிடப்பட்டு 3362 ஏக்கர் மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.

(ii) கமநல சேவை நிலையங்களின் முறையான கண்காணிப்பின் கீழ் செயற்திறனை மேம்படுத்துவதற்காக 2736 பரிசோதனை அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 737 பரிசோதனை அறிக்கைகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(iii) சேதனப் பசளை உற்பத்தியையும் பயன்பாட்டினையும் என்பவற்றை ஊக்குவிக்கும் நோக்கில் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 251.6 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 558 கமநல சேவை நிலையங்களையும் சிறிய விவசாய பூங்காக்களாக, 10 செயற்பாடுகள் ஊடாக அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அதன் செயன்முன்னேற்றம் 50 சதவீதமாக இருந்தது.

(iv) 09 மாவட்டங்களுக்குரிய கைவிடப்பட்டிருந்த 850 ஏக்கர் வயலில் சேதனப் பசளையைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்காக ரூபா 10 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதன் நிதி முன்னேற்றம் ரூபா 7.9 மில்லியனாக இருந்தது. திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் பௌதீக இலக்கு 100 ஏக்கராக இருந்த போதிலும், அச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(v) குருணாகல் மாவட்டத்தில் 8000 விவசாயிகளைத் தெரிவு செய்து 8000 மெ.தொ. சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்காக ரூபா 1.7 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் மூலம் 8000 மெ.தொ. சேதனப் பசளையை உற்பத்தி செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31

ஆந் திகதி வரையிலும் சேதனப் பசளை உற்பத்தியை ஆரம்பித்திருந்த விவசாயிகளின் எண்ணிக்கை 6815 ஆக இருந்ததுடன் உற்பத்தி செய்யப்பட்ட பசளை 5282 மெற்றிக் தொன்னாக இருந்தது.

(vi) தெரிவுசெய்யப்பட்ட 10,000 விவசாயிகளையும் உத்தியோகத்தர்களையும் மாகந்துர பிரதேச விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் பயிற்சி அளித்து மற்றும் பயிற்சி பெற்றோர் மூலம் வெளிக்களத்தில் 90,000 விவசாயிகளை பயிற்றுவிப்பதற்காக ரூபா 10 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 4593 விவசாயிகளுக்கும் 2219 உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டிருந்ததுடன் வெளிக்களத்தில் 24860 பேர் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர்.

**(ஆ) திட்டமிடல்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த 4 மாவட்டங்களின் சிறு நீர்ப்பாசன புனரமைப்பு நடவடிக்கைகளுக்காகவும் 3 மாவட்டங்களில் செய்கை பண்ணப்படாத வயல்களை பயன்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் 4 மாவட்டங்களில் நிர்மாண வேலைகளுக்காகவும் ரூபா 37,320,492 கூட்டுத்தொகையான பணம் செலவிடப்பட்டிருந்தன.

## 3.10 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் 2015 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த சீராக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் படி வெளிப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **சீராக்கல் தொடர்பான விபரம்** | **காலப்பகுப்பாய்வு** | | | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| | **06 மாதங்களிற்கு மேல் 01 ஆண்டிற்கு குறைந்த** | **01 ஆண்டிற்கு மேல் 03 ஆண்டுகளிற்கு குறைந்த** | **03 ஆண்டுகளிற்கு மேற்பட்ட** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| (i) வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 1,209,257 | 1,011,867 | 50,857 | 2,271, 981 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | இனங்காணப்படாத வரவு | 357,042 | 1,131,284 | - | 1,488,326 |
| (iii) | இனங்காணப்படாத செலவு வைத்தல்கள் | 330,292 | 4,200 | - | 334,492 |

**3.11 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

செய்கை பண்ணப்படாத வயல்களை பயன்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 281-2-2-12-2502 செலவின விடயத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 3,500,000 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய பண்டாரகம தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள கோரளை வாய்க்காலை புனரமைப்புச் செய்வதற்காக இந்நிதிஏற்பாடு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2016 யூன் 30 ஆந் திகதி அளவிலும் அப்புனரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) ரம்புக்பொத்த கமநல சேவை நிலையத்தின் கட்டிடம் ரூபா 18,827,083 செலவில் 2009 ஆம் ஆண்டின் போது நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அக்கட்டிடம் அமைந்துள்ள காணியின் உறுதியற்றதன்மை தொடர்பாக தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிசோதனை அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பரிந்துரைகள் முறையாக செயற்படுத்தப்படாமையால் கட்டிடம் கீழிறங்கியிருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது அந்நிர்மாணம் இடைநிறுத்தப்பட்டதுடன் அது தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்பு மாவட்ட அலுவலகத்தினால் ரூபா 1,774,650 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட 690 ஹியும் குழாய்களில் 2016 மே 31 ஆந் திகதி வரை 597 குழாய்கள் பகிர்ந்தளிக்கப்படாமல் கமநல் சேவை நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஈ) குருணாகல் மாவட்ட அலுவலகத்தினால் ரூபா 2,185,035 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த 200 கதவுகள் 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் குறித்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) துரித செயற்பாடொன்றாக கருதி புவக்கஹகும்புற மற்றும் புஸ்ஸலிஓயா அணைக்கட்டுகளுக்காக வான் கதவுகளை வழங்கும் பொருட்டு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 1,949,898 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அந்த அணைக்கட்டு கதவுகள் 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி மற்றும் 2016 பெப்ரவரி 20 ஆந் திகதிகளில் கையேற்கப்பட்டிருந்தன. 2016 யூன் 03 ஆந் திகதி வரையிலும் அந்த வான் கதவுகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

**3.13 நட்டங்களும் சேதங்களும்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்களும் சேதங்களும் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) திணைக்களத்திற்குரிய வாகனமொன்று 2015 சனவரி 27 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்தது. விபத்து தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை. 2016 யூலை 20 ஆந் திகதி வரையிலும் அவ்வாகனம் மாலபே வாகன பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 நவம்பர் 19 யூன் ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்த வாகனமொன்று தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான ஆரம்ப அறிக்கை 2014 நவம்பர் 20 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. நட்டத்தை காப்புறுதிக் கம்பனியிடமிருந்து அறவிடப்படப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2015 யூலை 02 ஆந் திகதி திருத்த வேலைகளுக்காக ரூபா 54,700 செலுத்தப்பட்டிருந்தது. 2016 யூலை 20 ஆந் திகதி வரையிலும் காப்புறுதி இழப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 யூன் 05 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்த திணைக்களத்திற்குரிய வேன் வண்டியொன்று 2016 யூன் 29 ஆந் திகதி ரூபா 1,308,353 செலவிடப்பட்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் காப்புறுதி இழப்பீடாக ரூபா 1,263,032 கிடைத்திருந்தமையால் ரூபா 45,321 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 3.14 முகாமைத்துவ நலிவுகள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) போலியான சான்றுகளைச் சமர்ப்பித்த 05 உத்தியோகத்தர்கள் 2013 மே மாதத்தின் போது கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டு 2015 ஒக்தோபர் 18 ஆந் திகதி சேவை முடிவுறுத்தப்பட்டிருந்தது. கட்டாய விடுமுறையில் அனுப்பிய காலம் மற்றும் சேவை முடிவுறுத்தப்பட்ட திகதிக்கு இடையே கருத்திற் கொள்ளக்கூடிய காலமொன்று எடுத்த காரணத்தினால் இந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,564,767 நிலுவைச் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ஆரம்ப புலனாய்வு நடவடிக்கைகள் 2016 யூலை 08 ஆந் திகதி (கணக்காய்வு திகதி) வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சிவலாக்குளம் கமநல சேவை நிலையத்திற்குரிய 04 சக்கர புதிய உழவு இயந்திரமொன்றை 2013 ஒக்தோபர் 05 ஆந் திகதி முதல் 2014 மார்ச் 07 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் உழவு இயந்திரத்தை சாரதியின் வீட்டில் நிறுத்திவைப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது, இந்த உழவு இயந்திரம் 2014 மார்ச் 07 ஆந் திகதி மிஹிந்தலை இயந்திரப் பொறியியலாளர் அலகிற்கு மீள ஒப்படைக்கும் போது உழவு இயந்திரத்தின் டயர்கள் தேய்ந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) உலர் வலய நீர் மற்றும் ஆரோக்கிய நலன் செயற்திட்டத்தின் கீழ் நெற்செய்கைக்காக பொருத்தமான காணியாக அமைப்பதற்காக ரூபா 3,221,449 தொகை விவசாய அமைப்பொன்றின் ஊடாக வவுனியா மாவட்ட கமத்தொழில் அபிவிருத்தி ஆணையாளரால் எடுக்கப்பட்டிருந்தது. இவ்வயல் காணிகளை அமைத்தல் கைவிடப்பட்ட காரணத்தினால் 2015/2016 பெரும்போகத்தில் வயல் காணி உடமையாளர்களுக்கு நெல் பயிரிடும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(உ) கமத்தொழில் வங்கி வழிகாட்டல் செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த கடன்களில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைக் கடன்தொகை ரூபா 249,237,136 ஆக இருந்ததுடன் அந்நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதில் பலவீனமான நிலைமையொன்று காணப்பட்டது.

## 3.15 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| i. | சிரேஷ்ட மட்டம் | 123 | 70 | 53 |
| ii. | மூன்றாம் மட்டம் | 645 | 488 | 157 |
| ii | இரண்டாம் மட்டம் | 16,066 | 13,329 | 2737 |
| iv | ஆரம்ப மட்டம் | 1,543 | 527 | 1,016 |
| | மொத்தம் | **18,377** | **14,414** | **3,963** |

**(இ) ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் 04 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரொருவரும் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.